பாம்பன் மீனவர்கள் 35 பேருக்கு ஆகஸ்ட் 21 வரை நீதிமன்றக் காவல்

ராமேசுவரம், ஆக. 9: இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட பாம்பன் மீனவர்கள் 35 பேரையும் வரும் 21ஆம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டதால், அவர்கள் அனைவரும் வாரியபொல சிறையில் வெள்ளிக்கிழமை அடைக்கப்பட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து தென் கடல் பகுதியில் 100-க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வியாழக்கிழமை அதிகாலை கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர், பாம்பனைச் சேர்ந்த சார்லஸ், சூசை, அஞ்சன், அலெக்ஸ் ஆகியோருக்குச் சொந்தமான 4 நாட்டுப் படகுகளில் இருந்த இன்னாசி, ஜான்சன், ஆரோக்கியம், வல்லரசு, சிசேந்திரன் உள்ளிட்ட 35 மீனவர்களை வியாழக்கிழமை மாலை கைது செய்தனர்.

இதையடுத்து, மீனவர்கள் கல்பட்டி துறைமுகத்துக்கு வெள்ளிக்கிழமை காலை அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களது நான்கு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இதைத்தொடர்ந்து, மீனவர்கள் மீது எல்லை தாண்டி மீன்பிடித்ததாக வழக்குப் பதிந்து, புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மீனவர்களிடம் நீதிபதி இவோனா விமலரத்ன விசாரணை மேற்கொண்டு, அனைவரையும் வரும் 21ஆம் தேதி வரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதையடுத்து, 35 மீனவர்களும் வாரியபொல சிறையில் வெள்ளிக்கிழமை இரவு அடைக்கப்பட்டனர்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு

பாஜக நிர்வாகியிடம் 7 மணி நேரம் விசாரணை

சென்னை, ஆக. 9: சென்னையில் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக, பாஜக வழக்குரைஞர் அணி நிர்வாகி ஆர்.சி. பால்கனகராஜிடம் போலீஸார் 7 மணி நேரம் விசாரணை செய்தனர்.

சென்னை பெரம்பூரில் ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை 5ஆம் தேதி வெட்டிக் கொலை செய்யப்பட்ட வழக்கில், 6 வழக்குரைஞர்கள் உள்பட 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

வியாசர்பாடி எஸ்எம் நகரைச் சேர்ந்த ரெளடி நாகேந்திரனுக்கும், அவர் மகனும், காங்கிரஸ் கட்சி நிர்வாகியுமான அஸ்வத்தாமனுக்கும் இந்த வழக்கில் தொடர்பு இருப்பது தெரியவந்தது. வேலூர் சிறையில் ஆயுள் தண்டனையை அனுபவிக்கும் ரெளடி நாகேந்திரன், ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்ய பல ரெளடிகளை ஒருங்கிணைத்திருப்பதும், கொலை செய்வதற்கான சதித் திட்டத்தை வகுத்திருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து போலீஸார், நாகேந்திரன் பெயரை வழக்கில் வியாழக்கிழமை சேர்த்தனர். அதோடு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நாகேந்திரனிடம் சென்னை போலீஸார், அவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டதற்கான உத்தரவு நகலை வெள்ளிக்கிழமை வழங்கினர். ஆனால் நாகேந்திரன், அதை வாங்க மறுத்ததாக கூறப்படுகிறது. மேலும், அந்த உத்தரவில் கையொப்பமிடவும் மறுத்தாராம்.

இந்த வழக்குத் தொடர்பாக நாகேந்திரனை, சென்னை எழும்பூர் 5ஆவது நீதித்துறை நடுவர் மன்றத்தில் ஆகஸ்ட் 12ஆம் தேதி ஆஜர்படுத்த போலீஸார் முடிவு செய்துள்ளனர். அன்றைய தினமே நாகேந்திரனை தங்களது காவலில் எடுத்து விசாரிக்க போலீஸார் திட்டமிட்டுள்ளனர்.

7 மணி நேரம் விசாரணை: இந்த வழக்குத் தொடர்பாக, தண்டையார்பேட்டையைச் சேர்ந்த ரெளடி சம்பவம் செந்தில், தாம்பரம் மண்ணிவாக்கம் பகுதியைச் சேர்ந்த ரெளடி சீசிங் ராஜா ஆகிய 2 பேரையும் தனிப்படையினர் தீவிரமாக தேடிவருகின்றனர். ரெளடி சம்பவம் செந்தில் குறித்த தகவல்களைத் திரட்டுவதற்காக பாஜக வழக்குரைஞர் அணி நிர்வாகி ஆர்.சி. பால்கனகராஜிடம் தனிப்படையினர் எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் சுமார் 7 மணி நேரம் விசாரணை செய்தனர்.

முன்னதாக, அவருக்கு அழைப்பாணை அனுப்பி விசாரணைக்கு ஆஜராகுமாறு போலீஸார் கூறி இருந்தனர். அதன்படி, பால்கனகராஜ் விசாரணைக்கு ஆஜரானார். ஏற்கெனவே இந்த வழக்கு விசாரணைக்கு பால்கனராஜ், ஒருமுறை ஆஜராகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆம்ஸ்ட்ராங் மனைவிக்கு கொலை மிரட்டல்: சிதம்பரம் பள்ளித் தாளாளர் கைது

சிதம்பரம், ஆக. 9: சென்னையில் கொலை செய்யப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் மனைவிக்கு கடிதம் மூலம் கொலை மிரட்டல் விடுத்ததாக சிதம்பரம் தனியார் பள்ளித் தாளாளரை சென்னை தனிப்படை போலீஸார் கைது செய்தனர்.

சிதம்பரம் பள்ளிப்படை தில்லையம்மன் கோவில் தெருவில் மழலையர் தொடக்கப் பள்ளி நடத்தி வருபவர் ராதாகிருஷ்ணன் மகன் அருண்ராஜ்(33). இவர், கடலூர் மாவட்ட முன்னாள் முதன்மைக் கல்வி அலுவலருக்கு கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் கைது செய்யப்பட்டு தற்போது ஜாமீனில் வெளியே வந்துள்ளார். இந்த வழக்கில் அருண்ராஜின் பள்ளியில் வாகன ஓட்டுநராகப் பணிபுரிந்த சதீஷ் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

சதீஷை பழிவாங்க அவரது பெயரில் ஆம்ஸ்ட்ராங் குடும்பத்துக்கு அருண்ராஜ் கொலை மிரட்டல் கடிதம் எழுதினாராம். இதுகுறித்து விசாரணை நடத்திய சென்னை தனிப்படை போலீஸார், அருண்ராஜை அண்மையில் விசாரணைக்கு அழைத்துச் சென்று கைது செய்தனர்.

மேலும் ஒருவரிடம் விசாரணை: மேலும், இந்த வழக்கு தொடர்பாக, சிதம்பரம் விளங்கி அம்மன் கோவில் தெருவில் கணினி மையம் நடத்திவரும் மணிமாறனை (34) தனிப்படை போலீஸார் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். இந்த கணினி மையத்தில் இருந்த 'ஹார்ட் டிஸ்க்'கையும் போலீஸார் எடுத்துச் சென்றனர்.

சவுக்கு சங்கர் மீதான குண்டர் தடுப்புச் சட்டம் ரத்து



சென்னை, ஆக. 9: யூடியூபர் சவுக்கு சங்கரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்த காவல் ஆணையரின் உத்தரவை ரத்துசெய்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆட்கொணர்வு வழக்கு: பெண் போலீஸாரையும், காவல் துறை உயர் அதிகாரிகளையும் அவதூறாகப் பேசியதாக சவுக்கு சங்கரை போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர், கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் குறித்து பொதுமக்கள் மத்தியில் வதந்தி பரப்பி, அரசுக்கு எதிராக போராடத் தூண்டியதாக மற்றொரு வழக்கு பதியப்பட்டது.

இந்த வழக்குகளின் அடிப்படையில், சவுக்கு சங்கரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்து சென்னை காவல் ஆணையர் கடந்த மே மாதம் உத்தரவிட்டார். இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் சவுக்கு சங்கரின் தாயார் கமலா ஆட்கொணர்வு வழக்கு தொடர்ந்தார்.

உள்நோக்கம் கொண்டது: இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், வி. சிவஞானம் ஆகியோர் விசாரித்து வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தனர். அதில், 'பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதமாக சவுக்கு சங்கர் செயல்பட்டார் என்று கூறும் காரணம் ஏற்கும்படி இல்லை. அரசையும், அதிகாரிகளையும் விமர்சனம் செய்ததால், அதைத் தடுக்கும் விதமாக இந்த நடவடிக்கை அவருக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ளது. இதில் உள்நோக்கம் இருப்பது தெரிகிறது.

பத்திரிகையாளர் சந்தியா ரவிசங்கர் 2018, 2019ஆம் ஆண்டுகளில் சவுக்கு சங்கருக்கு எதிராக 5 புகார்கள் அளித்துள்ளார். அவற்றின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத போலீஸார், 2024ஆம் ஆண்டு அந்தப் புகாரின் அடிப்படையில், அதாவது 6 ஆண்டுகளுக்கு பின்னர்தான் வழக்குப் பதிந்துள்ளனர். இது மிகப்பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

நம்பிக்கை குலையும்: மேலும், பெண் போலீஸார் குறித்து அவதூறாகப் பேசினார் என்று சமூக சேவகி ஒருவர் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் எல்லாம் சவுக்கு சங்கரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைப்பதற்குப் போதுமானதாக இல்லை. பேச்சுரிமையைத் தடுக்கும் விதமாக போலீஸார் செயல்பட்டால், ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையைக் குலைக்கும் விதமாகிவிடும். அவதூறு கருத்து தெரிவிப்போர் மீது குற்றவியல் சட்டம், சைபர் கிரைம் சட்டம், அவதூறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம். அதற்காக குண்டர் சட்டத்தைப் பயன்படுத்த முடியாது.

ஜனநாயகத்தின் ஆன்மா: 77ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட உள்ள இந்த மாதத்தில், மக்களின் பேச்சுரிமையை முடக்க வேண்டுமா? ஜனநாயகத்தின் ஆன்மாவே பேச்சுரிமைதான். அதைத் தடுப்பதை இந்த உயர்நீதிமன்றம் ஒருபோதும் அனுமதிக்காது. எனவே, சவுக்கு சங்கரை குணடர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்க கடந்த மே 12ஆம் தேதி காவல் ஆணையர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்கிறோம். வேறு வழக்குகளில் தேவையில்லை என்றால் சவுக்கு சங்கரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்' என்று உத்தரவிட்டனர்.

தமிழக அரசுப் பள்ளிகளில் 10,000 ஆசிரியர் பணி காலியிடங்கள்

சென்னை, ஆக. 9: பொது மாறுதல் கலந்தாய்வு நிறைவு பெற்ற நிலையில், அரசுப் பள்ளிகளில் 10,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கான பொது மாறுதல், பதவி உயர்வு கலந்தாய்வு கடந்த ஜூலை 1 முதல் 31ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பங்கேற்று தாங்கள் விரும்பிய இடங்களுக்கு இடமாறுதல் பெற்றனர்.

மாவட்டம் விட்டு மாவட்டம் நடைபெற்ற கலந்தாய்வின் முடிவில் அரசுப் பள்ளிகளில் 5,786 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பது தெரியவந்துள்ளது. அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 892, திருவண்ணாமலையில் 720, திருப்பூரில் 500, தருமபுரியில் 413, புதுக்கோட்டையில் 379, சேலத்தில் 289 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

அதேசமயம் சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் ஆசிரியர் காலிப் பணியிடங்கள் எதுவும் இல்லை. இதேபோல, அரசுப் பள்ளிகளில் 2000-க்கும் மேற்பட்ட முதுநிலை ஆசிரியர் பணியிடங்கள், 2,600-க்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என ஒட்டுமொத்தமாக தமிழக அரசுப் பள்ளிகளில் 10,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் நிகழ் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில், அதற்கேற்ப ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென கல்வியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

AMBIKA COTTON MILLS LIMITED

Regd. Office: 9-A, Valluvar Street,
Sivanandha Colony, Coimbatore-641 012.
CIN : L17115TZ1988PLC002269
Phone:0422-2491504, Fax:0422-2499623
website: www.acmills.in, email: ambika@acmills.in

STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30.06.2024

(Rs. In Lakhs,except per share data)

Particulars	Quarter Ended			Year Ended
	30.06.2024	31.03.2024	30.06.2023	31.03.2024
	(Unaudited)	(Audited)	(Unaudited)	(Audited)
1. Total Income from Operations	21563	20963	23300	84621
2. Operating Profit	4040	3421	3619	13202
3. Finance Cost	483	513	251	1907
4. Gross Profit	3557	2908	3368	11295
5. Depreciation	572	723	676	2770
6. Net profit/(Loss) for the period (before tax and exceptional items)	2985	2185	2692	8525
7. Net profit/(Loss) for the period before tax (after exceptional items)	2985	2185	2692	8525
8. Net profit/ (Loss) for the period after tax (after exceptional items)	2153	1609	2075	6298
9. Other Comprehensive Income	0	-66	0	-66
10. Total Comprehensive income for the period (Comprising Profit / (Loss) for the period (after tax)	2153	1543	2075	6232
11. Equity Share Capital	572.5	572.5	572.5	572.5
12. Reserves(Excluding Revaluation Reserve) as per Audited Balance Sheet	-	-	-	85317
13. Earnings Per Share (of Rs.10/- each) (for Continuing and discontinued operations)				
a) Basic	37.61	28.10	36.24	110.00
b) Diluted	37.61	28.10	36.24	110.00

Note : a) The above is an extract of the detailed format of Quarterly Financial Result ended 30th June, 2024 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligation and Disclosure requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter ended 30th June, 2024 are available on the Company's website (www.acmills.in) and on the websites of BSE (www.bseindia.com) & NSE (www.nseindia.com)

For Ambika Cotton Mills Limited
S/d
P.V.Chandran
Chairman & Managing Director
DIN:00628479

Place : Coimbatore
Date : 09.08.2024

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் டிசிடி லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
தொலைபேசி : 044 - 28332115, இணையதளம் : www.sundaram-clayton.com மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com
CIN : L51100TN2017PLC118316

30 ஜூன் 2024 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு 30.06.2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு 31.03.2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலங்கள் 31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது)	முடிவடைந்த காலாண்டு 30.06.2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு 31.03.2024 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலங்கள் 31.03.2024 (தணிக்கை செய்யப்பட்டது)
1	வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த வருமானம்	549.04	532.32	1,341.92	580.43	554.80	1,415.31
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	23.02	29.59	88.80	(49,93)	(38.40)	(95.77)
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	23.02	29.22	87.20	(49,93)	(38.77)	(97.37)
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	17.13	20.73	64.52	(55.85)	(47.34)	(120.13)
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம்]	15.88	20.06	62.92	(57.37)	(48.01)	(121.73)
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	10.12	10.12	10.12	10.12	10.12	10.12
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	787.49	-	-	590.04
8	பங்குகள் பிரீமியம்	-	-	-	-	-	-
9	நிகர மதிப்பு	813.49	797.61	797.61	542.79	600.16	600.16
10	நிலுவையில் உள்ள கடன்	1,144.02	975.78	975.78	1,603.90	1,417.37	1,417.37
11	நிலுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்	0.87	0.87	0.87	0.87	0.87	0.87
12	கடன் சம விகிதாசாரம் (மடங்கு)	1.40	1.22	1.22	2.91	2.34	2.34
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை)						
	(அ) அடிப்படை (ரூபாயில்)	8.47	10.25	31.89	(27.60)	(23.40)	(59.38)
	(ஆ) டைல்யூட்டட் (ரூபாயில்)	8.47	10.25	31.89	(27.60)	(23.40)	(59.38)
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	பொருந்தாது					
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	பொருந்தாது					
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம்	2.35	2.00	2.07	0.07	0.40	0.32
17	வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம்	4.38	5.22	5.91	0.49	0.97	1.07
18	நடப்பு விகிதம் (மடங்கு)	0.68	0.76	0.76	0.64	0.62	0.62
19	நீண்ட கால கடன் விகிதம் செயல்பாட்டு மூலதனத்திற்கு (மடங்கு)	-	-	-	-	-	-
20	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வராக்கடன் விகிதம் (மடங்கு)	-	-	-	-	-	-
21	நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு)	0.66	0.64	0.64	0.57	0.61	0.61
22	மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு)	0.43	0.41	0.41	0.56	0.53	0.53
23	கடனாளிகளின் சுழற்சி விகிதம் (மடங்கு)	5.93	6.58	6.61	7.83	8.49	8.15
24	சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (மடங்கு)	3.57	3.39	3.24	3.25	3.18	3.04
25	செயல்பாட்டு இலாப விகிதம் (%)	10.31	11.45	11.26	1.70	2.71	2.18
26	நிகர இலாப விகிதம் (%)	3.12	3.98	4.93	(9.62)	(8.46)	(8.38)

குறிப்புகள் :

1. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, ஆகஸ்ட் 9, 2024 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. முடிவுகள் நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaram-clayton.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
R. கோபாலன்
தலைவர்

தேதி : ஆகஸ்ட் 9, 2024

தி யுனைடெட் நீலகிரி டீ எஸ்டேட்ஸ் கம்பெனி லிமிடெட்

(அமால்கமேஷன்ஸ் குரூப்பின் ஓர் அங்கம்)
CIN : L01132TZ1922PLC000234
பதிவு அலுவலகம் : 3, சாவித்திரி சண்முகம் சாலை, ரேஸ் கோர்ஸ், கோயமுத்தூர் - 641 018.
E-Mail: headoffice@unitea.co.in Website: www.unitednilgiritea.com
Phone: (0422) 2220566 / 2220125

102வது வருடாந்திர பொதுக்கூட்டம், நிறுவனத்தின் பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற பதிவேடுகள் மூடப்படும் நாள்கள் மற்றும் மின்னணு வாக்களிப்பு தகவலின் அறிவிப்பு

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. நிறுவனத்தின் 102வது வருடாந்திர உறுப்பினர்கள் பொதுக்கூட்டம் (AGM) வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 6ஆம் தேதி 2024ம் வருடம் அன்று இந்திய நேரம் மதியம் 03.00 மணியளவில் காணொளி காட்சி (Video Conference/VC) மற்றும் ஒலி/காட்சி சார்ந்த வழிமுறைகள் ("Other Audio Visual Means / OAVM") மூலமாக வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் (AGM Notice) குறிப்பிட்டுள்ள விஷயங்கள் கூட்டத்தின் அலுவலாக கருதப்படும்.
2. பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) 12 மே 2020, 15 ஜனவரி 2021 மற்றும் 13 மே 2022 தேதிகளில் வழங்கிய சுற்றறிக்கைகள் 8 ஏப்ரல் 2020 தேதியிட்ட எண் 14/2020, 13 ஏப்ரல் 2020 தேதியிட்ட எண் 17/2020, 5 மே 2020 தேதியிட்ட எண் 20/2020 மற்றும் 13 ஜனவரி 2021 தேதியிட்ட எண் 02/2021 மற்றும் 5 மே 2022 தேதியிட்ட சுற்றறிக்கை இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் வழங்கிய சுற்றறிக்கைகள் 12 மே 2020, 15 ஜனவரி 2021 மற்றும் 13 மே 2022 தேதியிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிறுவனத்தின் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களுக்கு பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது.
3. 2023-24 நிதியாண்டிற்கான பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான **www.unitednilgiritea.com**, தேசிய பங்கு சந்தையின் இணையதளம் **www.nseindia.com** மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் இணையதளமான **www.evoting.nsdl.com**ல் ஆகிய இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
4. உறுப்பினர்கள் காணொளி காட்சி (Video Conference/VC) மற்றும் ஒலி/காட்சி சார்ந்த வழிமுறைகள் ("Other Audio Visual Means / OAVM") வசதி மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேருவதற்காக வழிமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்டத்தின் அறிவிப்பில் (AGM Notice) வழங்கப்பட்டுள்ளன. VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 103ன் கீழ் கூட்டத்திலுள்ள உறுப்பினர் எண்ணிக்கையை (Quorum) கணக்கிடும் நோக்கத்திற்காக கருதப்படுவார்கள்.
5. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்களின் மின்னஞ்சல் IDயை ஏதேனும் நிறுவனத்திடமோ / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடமோ பதிவு செய்யப்படாமல் இருந்தால், வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு / வருடாந்திர (ஆண்டு) அறிக்கை பெறுவதற்கும் மற்றும் காணொளி காட்சி மற்றும் ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் மூலமாக 102வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் மற்றும் தொலை மின் வாக்களிப்பு மூலமாக வாக்களிக்கவும், கீழ்கண்ட சான்றிதழ்களை ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களாக மின்னஞ்சல் மூலம் **headoffice@unitea.co.in** என்ற முகவரிக்கு அனுப்பவும்.
   - a) கையெழுத்திட்ட கோரிக்கை / கடிதத்துடன் உறுப்பினர் பெயர், போலியோ எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் முழு அஞ்சல் முகவரி.
   - b) ஸ்கேன் செய்யப்பட்ட பங்கு சான்றிதழ் (முன்னும் பின்னும்).
   - c) ஸ்கேன் செய்யப்பட்ட பான் கார்டு.
   - d) ஸ்கேன் செய்யப்பட்ட சான்றிதழ் ஏதாவது ஒன்று (ஆதார் கார்டு, ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அட்டை, கடவு சீட்டு / வங்கி அறிக்கை).
6. நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2013ன் 20ம் விதியை கருத்தில் கொண்டு நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 108 (அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் உட்பட) மேலும் இந்திய காப்பாவணங்கள் பரிமாற்றும் வாரியம் வெளியிட்டுள்ள பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் விதிமுறைகள் 2015, விதிமுறை எண் 44 ஆகிய அனைத்திற்கும் இணங்க NSDL வழங்கும் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் வசதியையும் நிறுவனம் வழங்கியுள்ளது.

   உறுப்பினர்கள் பின் வருவனவற்றை கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் :
   - a) பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை, டெப்பாசிட்டாரி / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்திருக்கும் எல்லா உறுப்பினர்களுக்கும் மின்னணு முறையில் 9 ஆகஸ்ட், 2024 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
   - b) தொலை மின்னணு வாக்களிப்பு **செவ்வாய்க்கிழமை, 3 செப்டம்பர், 2024 அன்று** காலை 09.00 **மணிக்கு** (இந்திய நேரம்) தொடங்கும். தொலை மின்னணு வாக்களிப்பு **வியாழக்கிழமை, 5 செப்டம்பர், 2024 அன்று மாலை 05.00 மணிக்கு** (இந்திய நேரம்) முடிவடையும்.
   - c) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு **வியாழக்கிழமை**, 5 செப்டம்பர், 2024**ஆம் தேதி** மாலை 5.00 **மணிக்குப்பின்** அனுமதிக்கப்படாது.
   - d) தொலை நிலை மின்னணு / பொதுக்கூட்டத்தின்போது நடக்கவிருக்கும் மின்னணு வாக்களிப்புக்கு தகுதியான உறுப்பினர்களைத் தீர்மானிக்கும் தேதி **வெள்ளிக்கிழமை, 30 ஆகஸ்ட்**, 2024.
   - e) காணொளி காட்சி மற்றும் ஒலி காட்சி சார்ந்த வழிமுறைகள் வசதி மூலம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் தொலை மின்னணு வாக்களிப்பு முறை மூலம் தீர்மானத்தில் ஏற்கனவே வாக்களிக்காமல் இருந்து மற்றும் வேறேது காரணத்திற்காகவும் வாக்களிப்பில் இருந்து தடை செய்யப்படாமல் இருந்தால், கூட்டத்தின்போது நடைபெறும் மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கலாம்.
   - f) வாக்களிப்பு தீர்மானிப்பு நாளன்று உறுப்பினர்களின் பதிவேட்டில் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனீட்டாளர்கள் (Beneficial Owners) பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு மட்டும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலை மின்னணு வாக்களிப்பு அல்லது கூட்டத்தின்போது மின்னணு மூலம் வாக்களிக்கும் வசதியைப் பெற உரிமை உண்டு. உறுப்பினர்களின் வாக்குரிமை விகிதம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் உறுப்பினர் அவரவர் வைத்திருக்கும் பங்கின் விகிதாச்சார அடிப்படையில் இருக்கும்.
   - g) மின்னணு முறையில் பொதுக்கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று வாக்களிக்கும் உரிமை தீர்மானிக்கப்படும் நாளன்று நிறுவனத்தின் உறுப்பினராகி பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கும் வழிமுறைகளை பின்பற்றி உள்நுழைவு பெயர் மற்றும் கடவுச்சொல்லை பெறலாம்.
   - h) டீமேட் முறையில் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதிருப்பின் தொலை மின்னணு வாக்களிப்பு தொடர்பான விவரங்கள், பொதுக்கூட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.
   - i) தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மற்றும் பங்குகளை காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் Integrated Registry Management Services Private Limitedஇன் மின்னஞ்சலான **corpserv@integratedindia.in** புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
   - j) மின்னணு வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து **www.evotingnsdl.com** என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கங்கள் (downloads) பிரிவில் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ) மற்றும் மின்னணு வாக்களிக்கும் பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது **022-48867000** எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும் அல்லது Ms. Pallavi Mhatre, NSDLஇன் **evoting@nsdl.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களின் கோரிக்கையை அனுப்பவும்.
   - k) மின்னணு வாக்களிப்பு குறித்து ஏதேனும் குறை இருந்தால், Ms. Pallavi Mhatre, NSDL, 4th Floor, "A" Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai 400 013,, மின்னஞ்சல் **evoting@nsdl.com** எனும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.
   - l) திரு. S. காசி விஸ்வநாதன், பங்குதாரர், கோபாலய்யர் & சுப்ரமணியன், பட்டயக் கணக்காளர், கோவை அவர்களை மின்னணு வாக்களிப்பு முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக நிறுவனம் ஆய்வாளராக (Scrutinizer) நியமித்துள்ளது.
   - m) வாக்களிக்கும் முடிவை நிறுவனம் தனது **www.unitednilgiritea.com** என்ற இணையதளத்தில் அறிவிக்கும். மேலும் தேசிய பங்கு சந்தைக்கும் இந்த தகவல் அனுப்பப்படும் மற்றும் **www.evoting.nsdl.com** இணையதளத்திலும் காணப்பெறலாம்.

நிறுவனச் சட்டம், 2013 இன் பிரிவு 91 மற்றும் SEBI இன் விதிமுறைகள் 42 (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ஆகியவற்றின் விதிகளின்படி, நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற பதிவேடுகள் 2024ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31ஆம் **தேதி சனிக்கிழமையிலிருந்து** 2024ம் வருடம் செப்டம்பர் மாதம் 6ம் தேதி வெள்ளிக்கிழமை வரை (குறிப்பிட்டுள்ள இரண்டு நாட்களையும் சேர்த்து) உறுப்பினர் பொதுக்கூட்டம் மற்றும் இறுதி ஈவுத்தொகை செலுத்துதலுக்காக மூடப்படும் என அறிவிக்கப்படுகிறது.

குழுவின் ஆணைப்படி
தி யுனைடெட் நீலகிரி டீ எஸ்டேட்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக
R.V. ஸ்ரீதரன்
நிறுவன செயலாளர்

கோயமுத்தூர்
09.08.2024

கல்வி, வேலை வாய்ப்பு
செய்திகளுக்கு...
www.dinamani.com